பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 29 | புதன்கிழமை | 15.11.2023 | கதிர் 369

## 2023 யோசனைகளே நிறைவேறவில்லை, அதனால்

# 2024 வரவு செலவுத் திட்டத்தில் நம்பிக்கை வைக்கவே முடியாது

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் சபையில் இடித்துரைப்பு

2023 வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட யோசனைகளே இன்னும் நிறைவேற்றப்படாத நிலையில் 2024 வரவு செலவுத் திட்டத்தில் நம்பிக்கை வைக்க முடியாது என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நிலையியற் கட்டளை 27/2இன் கீழ் கேள்வி எழுப்பி குறிப்பிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:

எந்தவொரு ஆட்சியும் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை முன்வைப்பதில் மட்டும் திருப்தியடைய முடியாது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகள் மற்றும் விடயங்களை நிறைவேற்றுவது ஆளும் தரப்பு மற்றும் அரச அதிகாரிகளின் பொறுப்பாகும்.

முன்மொழிவுகள் செயற்படுத் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான மோதல் தொடர்ந்து வலுத்து வருகின்றது. அமைச்சர் பதவியிலிருந்து விலகி எதிர்க் கட்சி வரிசைக்குச் செல்லும் வரையில் இந்த மோதல் தீராது என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள்.

நேற்று திடீரென ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்த அறிக்கை ஒன்றில், இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு இனி இடைக்கால நிர்வாகம் ஒன்றை நியமிப்பதாயின் அதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்படவேண்டும் என்று அமைச்சரவை முடிவு செய்திருப்பதாகத் தெரிவித்தது.

அத்துடன் சர்வதேச கிரிக்கெட் சபையால் இலங்கை கிரிக்கெட்டிற்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்பான நடவடிக்கைகளைக் கையாள் ☞ 2

## மழை தொடரும்

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை காரணமாக நாடு முழுவதும் மழையுடனான வானிலை தொடர்ந்தும் நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதுதொடர்பில் அத்திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேல், மத்திய, சப்ரகமுவ, தென், வடக்கு, வட மத்திய மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய ☞ 2

## பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷக்களே காரணம்

### உயர் நீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ ஆகியோரே காரணம் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்த மனுதாரரின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால், பேராசிரியர் டபிள்யூ.டி. லக்ஸ்மன், நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலா, முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர, இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபை உறுப்பினர்கள் ஆகியோரும் மனுதாரரின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் குழுவின் பெரும்பான்மையான நீதிபதிகள் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் கலாநிதி மஹீம் மெண்டிஸ் உள்ளிட்ட தொழில் வல்லுநர்களால் இந்த மனு முன்வைக்கப்பட்டது, ஜனாதிபதி சட்டத்தரணி உபுல்ஜயசூரிய உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழு இந்த வழக்கில் வாதாடியிருந்தனர்.

## இலங்கை கிரிக்கெட்டின் இந்த வீழ்ச்சிக்கு அமைச்சர், நாடாளுமன்றமே காரணம்

### அணித் தெரிவுக் குழுத் தலைவர் தெரிவிப்பு

நீண்ட காலமாக பல்வேறு மட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் பல தரப்பட்ட சதித்திட்டங்களின் விளைவாகவே இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டு தற்போதைய நிலைமையை எதிர்நோக்கியுள்ளதாக சிறீ லங்கா கிரிக்கெட் சபையின் தெரிவுக்குழு தலைவர் பிரமோத்ய விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இந்த வீழ்ச்சிக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் நாடாளுமன்றத்தை அவர் சாடினார்.

அவர் இது தொடர்பில் நேற்று விடுத்துள்ள விசேட ☞ 2

## எம்.பிக்களின் கைகலப்பு குறித்த விசாரணை அறிக்கை கையளிப்பு

2023 ஒக்டோபர் 20 நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்கு சபாநாயகரினால் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றக் குழுவின் அறிக்கை அதன் தலைவர் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷவினால் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

2023 ஒக்டோபர் 20 நாடாளுமன்ற வளாகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான டயானா கமகே, ரோஹனபண்டார, சுஜித் சஞ்சய்பெரேரா ஆகியோருக்கிடையில் இடம்பெற்றதாகக் ☞ 8

## நாட்டுக்கான கடமையைச் செய்வதற்கு வருமாறு இளையோருக்கு அழைப்பு

டிஜி-ஈகொன் (DI-GI-ECON) 2030 வேலைத் திட்டத்துடன் இணைந்து நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி நாட்டுக்கான கடமையை நிறைவேற்றுமாறு நாட்டை விட்டு வெளியேறும் இளைஞர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களைக் கேட்டுக்கொள்வதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

உலகளாவிய தொழில் முயற்சியாளர் வாரத்தின் உத்தியோக பூர்வ அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நவம்பர் 13 முதல் ஒரு வார காலம் 'எண்டர்பினர்ஸ் திரைவ் கியர்' (Entrepreneurs Thrive Here) என்ற தொனிப்பொருளின் கீழ் 200 இற்கும் மேற்பட்ட நாடுகள், உலகளாவிய தொழில் முயற்சியாளர் வாரத்தை கொண்டாடுகின்றன.

இந்த வாரம் முழுவதும், நாட்டின் பல்வேறு இடங்களில், துறைசார் ☞ 8

## காஸாவில் போரை உடன் நிறுத்த வலியுறுத்தி 159 எம்.பிக்கள் மனு

### ஐ.நாவிடம் நேற்றுக் கையளிப்பு

காஸாவில் உடனடியாகப் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தலையிடுமாறு கோரி, இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட மனு ஒன்று, கொழும்பில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் கையளிக்கப்பட்டது.

நேற்று இந்த மனுவைக்கையளிக்கும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன், ரவூப் ஹக்கீம், வீரசுமன வீரசிங்ஹ, பௌசி, ஹலீம், இஷாக்ரஹ்மான், ஹரீஸ், தௌபீக் மற்றும் மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

மனுவைக் ☞ 2

## பொருளாதார, அரசியல் சீரமைப்புக்கு அனைவரது ஆதரவும் மிக அவசியம்

### ஜனாதிபதி வலியுறுத்து

நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் போக்கை மாற்றும் மறுசீரமைப்புத் திட்டத்திற்கு அனைவரின் ஆதரவும் அவசியம்- ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்த நாட்டில் கிரிக்கெட் விளையாட்டை மீண்டும் வெற்றிப் பாதைக்கு கொண்டுவர விரும்புகிறார் எனவும், வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப முடியுமாக இருந்தால் கிரிக்கெட்டையும் மீளக் கட்டியெழுப்ப முடியும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ☞ 8

## 2024இல் 1.8 சதவீதம் பொருளாதார வளர்ச்சி

### அதுவே இலக்கு என்கிறார் நிதி இராஜாங்க அமைச்சர்

2024ஆம் ஆண்டினை பொருளாதாரரீதியில் வலுவான ஆண்டாக மாற்றிக்கொள்ள, 1.8 சதவீத பொருளாதார வளர்ச்சியை நோக்கிப் பயணிப்பதே அரசாங்கத்தின் அடிப்படை நோக்கமாகும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியாக பதவியேற்றதன் ☞ 8

## வரவு செலவுத் திட்டம் "வரும் ஆனால் வராது"

### சிறீதரன் எம்.பி. ஏளனம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்டுள்ள 2024 வரவு செலவுத் திட்டம் "வரும் ஆனால் வராது" என்பதைப் போன்றதுதான் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவுசெலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதல் நாள் குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு ☞ 2

## 2024 வரவு செலவுத் திட்டம் கனவின் அடிப்படையிலானது

### ஜேவிபி போட்டுத் தாக்கு

2024ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் புரட்சிகரமானதல்ல, அது கனவு உலகத்தை அடிப்படையாகக் கொண்டது. புரட்சிகரமானது என்றால் சமூககட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். கனவு உலகு முன்மொழிவுகள் ஒருபோதும் மாற்றத்தை ஏற்படுத்தாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் ☞ 8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

வதற்கான அதிகாரத்தை, இந்த விவகாரத்தைக் கையாளவென நியமிக்கப்பட்ட அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான அமைச்சரவை உபகுழுவிற்கு ஜனாதிபதி வழங்கியிருக்கிறார் என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது.

இலங்கைஅணிஉலகக்கிண்ணப் போட்டியில் படுதோல்வியடைந்தைத் அடுத்து ஏற்பட்ட நிலமை காரணமாக, இலங்கைக் கிரிக்கெட் சபையை பதவி நீக்கிவிட்டு புதிய இடைக்கால நிர்வாக சபையை விளையாட்டுத்துறை அமைச்சர் நியமித்தார். அதுமட்டுமல்லாது பதவி நீக்கப்பட்ட கிரிக்கெட் சபை ஊழல் நிறைந்தது என்றும் குற்றஞ்சாட்டினார். ஆனால், அவரது பதவி நீக்கத்தை எதிர்த்து நீதிமன்றம் சென்றகிரிக்கெட்சபை, இடைக்காலத் தடையைப் பெற்றது.

இந்தப் பிரச்சினையில் கிரிக்கெட் சபைக்கு ஆதரவாகவே ஜனாதிபதி நடக்கிறார் என்பது அமைச்சரின் குற்றச்சாட்டு. ஊழல்வாதிகளான கிரிக்கெட் சபை நிர்வாகத்தினரைப் பாதுகாக்கஜனாதிபதிமுற்படுகின்றார் என்கிற சீற்றத்தில் இருக்கிறார் அமைச்சர். ஜனாதிபதியோ, அமைச்சரின் அதிரடி உத்தரவுகளைக் கட்டுக்குள் கொண்டுவந்து அவரது அமைச்சின் மீதும் தனது அதிகாரத்தைச் செலுத்துவதற்கான முயற்சியில் இருக்கிறார். அதனால், கிரிக்கெட் விவகாரத்தைக் கையாள்வதற்கு அமைச்சர் அலி சப்ரி தலைமையில் அமைச்சரவை உப குழு ஒன்றை நியமித்தார்.

இதையடுத்து ஜனாதிபதிக்கும் அமைச்சருக்கும் இடையிலான மோதல் தீவிரமடைந்தது. அமைச்சர் பதவி விலகி எதிர்க் கட்சி வரிசைக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவரை வரவேற்பதற்குத் தாம் தயாராக இருக்கின்றார் என்று சஜித் பிரேமதாஸ ஏற்கனவே அறிவித்திருக்கிறார்.

இந்தநிலையிலேஜனாதிபதிஊடகப் பிரிவு நேற்று விடுத்த அறிக்கையை விளையாட்டுத்துறை அமைச்சர் உடனடியாகவே மறுத்திருக்கிறார். அவரது அமைச்சின் கடிதத் தலைப்பில் வெளியிட்டப்பட்ட பதில் அறிக்கையில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு பொய் சொல்லியிருக்கிறது என்றுசாடியிருக்கின்றார்.இலங்கைக் கிரிக்கெட் சபைக்கான இடைக்கால நிர்வாகத்திற்கு அமைச்சரவையின் அனுமதிபெறப்படவேண்டும்என்கிற எந்த முடியும் அமைச்சரவையில் எடுக்கப்படவில்லை என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

முற்றிவரும் இந்தப் பிரச்சினை அமைச்சர் ரொமேஷின் பதவி விலகலுடனேயே ஒரு முடிவுக்கு வரும் என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள். விரைவில் அது நடக்கும் என்றும் எதிர்வு கூறுகின்றன. மைதானத்தில் கிரிக்கெட்டை நன்றாக விளையாடுகிறார்களோ இல்லையோ மைதானத்திற்கு வெளியே நன்றாக ஆடுகின்றார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 2024 வரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்படுகின்றதா இல்லையா மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்து அறிக்கையிடப்பட வேண்டும். அத்துடன் கடந்த வருட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை கண்காணிப்பதற்காக காரியாலயம் ஒன்று அமைப்பதாக எமது ஆட்சி தெரிவித்திருந்தது. அதனைக்கூட அமைக்கவில்லை.

வெரிட் ஆய்வு நிறுவனத்தின் அறிக்கையின் பிரகாரம், 2023 இக்கான வரவுசெலவு திட்டத்தில் குறிப்பிட்ட 50 திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடு மூலம் 97 சதவீதம் எதற்காக ஒதுக்கப்பட்டது என்பது குறித்த முழுமையான தகவல்கள் இல்லை.

அவ்வாறே, கடந்த வருடம் அதிகளவு நிதி ஒதுக்கப்பட்ட 25 பிரேரணைகளில் 17 பிரேரணைகள் குறித்த தகவல்கள் இல்லை அல்லது அதுகுறித்துதகவல்களைகண்டறிய முடியாதுள்ளன. அதனால் இந்த வரவுசெலவுத்திட்டநம்பகத்தன்மை குறித்து சிக்கல்கள் உள்ளன.

அத்துடன் 2017 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் தொடர்பான தரவுகள் இன்மை 17 வீதமாக காணப்பட்டது2023ஆம்ஆண்டு97 வீதமாக காணப்படுவது எவ்வாறு? இது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்யார்என கேட்கிறோம்.

இந்த பொறுப்புக்கூறல் இல்லை என்றால் அடுத்த வருட வரவு செலவுத் திட்டம் குறித்து நம்பிக்கை கொள்ள முடியாது. எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தின் ஆய்வுப் பிரிவின் பொருளாதார நிபுணர்கள் குழு இணைந்து மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம், 2023 வரவு செலவுதிட்ட முன்மொழிவுகளின் 77 அம்சங்கள் குறித்த பகுப்பாய்வில் 69 முன்மொழிவுகளின் தகவல்கள் முழுமையடையவில்லை என்றும், அவற்றில், 12 முன்மொழிவுகளின் தகவல்கள் வெளியிடப்படவில்லை என்றும் தெரிகிறது.

16 வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவே இல்லை, 29 திட்டங்களின் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாக உள்ளது. 12 திட்டங்களின் முன்னேற்றம் மட்டுமே 50 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. இவ்வாறு இருக்கையில் எவ்வாறு 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட யோசனைகள் மீது நம்பிக்கை வைக்க முடியும்.

அத்துடன் மாகாண சபைகளுக்குட்பட்ட 139 பாடசாலைகளுக்கும், 23 தேசிய பாடசாலைகளுக்கும் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதாக 2023 வரவு செலவு திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் 200 மில்லியன் ரூபா ஒதிக்கியிருந்த போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தகுதியின் அடிப்படையில் பல்கலைக்கழக ஆட்சேர்ப்பு நடைபெறவில்லை .பல்கலைக்கழக பட்டதாரிகளின் நிலைமை குறித்து ஆராய்வதற்கான சபை தொடர்பான சட்ட மூலம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. வெளிநாட்டு புலமைப்பரிசில் திட்டம் இன்னும் கலந்துரையாடல் மட்டத்தில் மட்டுமே உள்ளது.

உலகளாவிய காலநிலை மாற்ற பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதாக கூறினீர்கள் அது இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. இலங்கையின்வரலாறுதொடர்பாகஆராய்வதற்கான நிறுவனம் ஆரம்பிக்கப்படும் என கூறுனீர்கள், அதுவும் இன்னும்செயற்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட யோசனைகள் மீது நம்பிக்கை வைக்க முடியாது.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட யோசனைகளுக்கு ஆதரவுவழங்குவதாயின்2023ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்ட விடயங்கள் பூர்த்தியாகி இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு பூரணப்படுத்தவில்லை.

அத்துடன் இம்முறை முன்வைக்கப்பட்டிருக்கும் சில முன்மொழிவுகள் 2023 ஆம் ஆண்டிலும் முன்வைக்கப்பட்டு,நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டபோதும் அது நடைமுறைப்படுத்தப்பட வில்லை. இம்முறையும் குறித்த முன்மொழிவுகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

## மழை தொடரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மழை பெய்யலாம். பதுளை, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, குருணாகல், மாத்தறை ஆகிய 6 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நாடளாவிய ரீதியில் 14,225 வீடுகள் மற்றும் கட்டடங்கள் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. சுமார் 5000 வீடுகளில் இருந்து மக்கள் அகற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, மண்சரிவு அபாயம் மிக்க இடங்களில் இருந்து 50,000 பேர் வரை வெளியேற்றப்பட்டுள்ளதாக நிறுவகத்தின் மண்சரிவு மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவின் சிரேஷ்ட பொறியியலாளரும்புவிச்சரிதவியல் நிபுணருமான லக்சிறி இந்திரஜித் குறிப்பிட்டார்.

மாத்தறை, கண்டி, நுவரெலியா, குருணாகல், மாத்தளை, இரத்தினபுரி, களுத்துறை, காலி ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் மக்களே இவ்வாறு வெளியேற்றப்பட்டுள்ளதோடு, மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியிருந்த 1685 வீடுகளைச் சேர்ந்த மக்கள் மீளக் குடியேற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த சதித்திட் டத்தின் பின்னணியில் சிறீ லங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரத்தைக் கைப்பற்ற சண்டையிடுபவர்களும் ஆட்ட நிர்ணய சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ள தரகர்களும் தேசிய அணியில் தமது இடத்தை உறுதிசெய்யப் போராடுபவர்களும் இருக்கின்றனர்.

அத்துடன், அவர்கள் சமூக ஊடகங்களைதமதுவழிமுறையாகப் பயன்படுத்தி வருகின்றனர். குறுகிய நோக்கங்களுக்காக தேசிய அணியின் இருப்பை சீர்குலைக்க முயற்சிப்பவர்களுக்கான பின்புலம் புதிய விளையாட்டுத்துறை அமைச்சரின் நியமனத்தின் பின்னரே ஏற்படுத்தப்பட்டது.

தெரிவுக்குழுவிற்கு முன்னைய விளையாட்டுத்துறை அமைச்சர்களின் ஆதரவு இருந்தது. அதேநேரம், அடுத்த 5 வருடங்களில் நாட்டிற்கு வெற்றியைத் தேடித்தரக்கூடிய அணியைத் தயார்ப்படுத்துவதே தெரிவுக் குழுவின் முயற்சியாக இருந்தது. அதற்காக அதிகபட்ச முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், விளையாட்டுத்துறை அமைச்சரும் அமைச்சும் அதனை நிராகரித்துள்ளனர்.

சில சந்தர்ப்பங்களில் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட தெரிவுக்குழுவின் தீர்மானங்களை, அமைச்சின் கீழ் இயங்கிய குழு அங்கீகரிப்பதில்லைஎனசமூகஊடகங்களில் அவர்கள் வெளியிடும் கருத்துகளின் ஊடாக வெளிப்பட்டுள்ளது. இதனூடாக தெரிவுக்குழு தொடர்பில் சமூகத்தில் காணப்பட்ட நம்பிக்கை வீழ்த்தப்பட்டுள்ளது.

மூத்த வீரர்களை அணிக்குள் உள்வாங்காமையை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் இவ்வாறு தெரிவுக்குழுவை விமர்சித்தனர். ஆஸ்திரேலிய சுற்றுப் பயணம் தொடர்பில் வெளியிடப்பட்ட குசல சரோஜினி அறிக்கையின் மூலம் தெரிவுக்குழு கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தது. இரண்டாவது அழுத்தம் நாடாளுமன்றத்தினால் ஏற்படுத்தப்பட்டது.

தனிநபர்களின் குறுகிய இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, தெரிவுக்குழு பலியாக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் விளையாட்டின் எழுச்சி அல்லது வீழ்ச்சியைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பமே தற்போது உருவாகியுள்ளது. அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதே தற்போதைய தேவையாகும் என்றார்.

## காஸாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையளித்த பின்னர் மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

159ற்கும்மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட மனுவை, கொழும்பில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் கையளித்துள்ளோம். ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ்அவர்களுக்குமுகவரியிட்ட இந்தக் கடிதமே இலங்கை தூதரகத்தில் கையளிக்கப்பட்டது. நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் 225 பேரும் இதே நிலைப்பாட்டிலேயே உள்ளனர். எனினும், இந்த முயற்சி அவசரமாக மேற்கொள்ளப்பட்டதனால், அனைவரினது கையொப்பங்களையும் பெறமுடியாமல் போய்விட்டது.

இஸ்ரேலியர்களால் ஏவப்படும் ஏவுகணைகளும் பொழியப்பட்டு வரும் குண்டுகளும் காஸாவில் மிக மோசமான அழிவை ஏற்படுத்தி வருகின்றன. பச்சிளம் குழந்தைகள், பெண்கள் என்ற விவஸ்தையின்றிகுண்டுகளைவீசி, இந்த அக்கிரமங்களை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். அல் ஷிபா வைத்தியசாலை மீதும் குண்டுகள் வீசப்பட்டு, அங்குள்ள நோயாளர்கள்வைத்தியர்கள்உட்பட மருத்துவ உதவியாளர்கள் பலரும் கொல்லப்பட்டுள்ளனர். காஸாவே ஒரு மயான பூமியாக மாறியுள்ளது.

எனவே, போர் நிறுத்தத்தினால் மட்டுமே இந்த மக்களைக் காப்பாற்ற முடியும். எனவே, போர்நிறுத்தத்தை மேற்கொள்வதற்குஐ.நா. நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரியே, நாம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளோம். அதுமாத்திரமின்றி, பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான ரீதியில் உதவிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இஸ்ரேல் மேற்கொள்ளும் இந்த அராஜகத்துக்கு எதிராக உலக நாடுகள் ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்குலக நாடுகள் இஸ்ரேலுக்கு உதவக் கூடாது.

இந்தப் போரினால் 120க்கு மேற்பட்ட ஐ.நா. ஊழியர்களும் கொல்லப்பட்டுள்ளனர். ஐ.நாவில் அங்கம் வகிக்கும் நாடுகளில், 120 உலக நாடுகள் போர் நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டுமென பிரேரணை கொண்டுவந்த போதும், ஐ.நாவினால் இதுவரை எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாதிருக்கிறது.

அத்துடன், 54க்கு மேற்பட்ட முஸ்லிம் நாடுகளும் இந்த விவகாரத்தை கையிலெடுத்து, போர் நிறுத்தத்தைக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். அதே போன்று, அரபு நாடுகள் மற்றும் இஸ்லாமிய ஒத்துழைப்பு நாடுகள் ஆகியவற்றுக்கும் மேற்குலக நாடுகளான பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்கும் இந்த மனுவின் பிரதிகளை அனுப்ப நடவடிக்கை எடுப்போம் என்றார்

இதேவேளை, குறித்த மனுவின் பிரதியொன்று இலங்கைக்கான பலஸ்தீன தூதுவருக்கும் வழங்கப்பட்டது.

## வரவு செலவுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தனது உரையில்மேலும்தெரிவித்ததாவத:

ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட 2024 நிதியாண்டுக்கான வரவு செலவுத்திட்டயோசனைகள் மற்றும் முன் மொழிவுகள் 'வரும் ஆனால் வராது' என்ற நகைச்சுவை வசனம் போலவே உள்ளது.

அதாவது அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா ஜனவரி மாதம் வரும் ஆனால் வராது.. அடுத்த ஏப்ரல் மாதத்துக்கு பின்னர் தான் அதனைப் பற்றி யோசிக்கலாம் என்று ஜனாதிபதி மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும்போது நம்பிக்கை என்பது சரியாக சொல்லப்படவேண்டும். இன்றைய பத்திரிக்கைகளில் பார்த்தால் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா கொடுப்பனவு என்றுதான் உள்ளது. ஆனால் அது ஜனவரி முதல் என்று சொல்லப்பட்டாலும் 2024 ஏப்ரல் மாதத்துக்கு பிறகுதான் பெறமுடியும். இந்த இடைப்பட்ட காலத்துக்குள் எதுவும் நடக்கலாம். நாடாளுமன்ற அல்லது ஜனாதிபதி தேர்தல்கள்கூட நடக்கலாம்.

எனவே இவ்வாறான ஏமாற்று நடவடிக்கைகள் அரசிடம் இருக்கும் வரைக்கும் அரசினால் சரியான தொரு பாதையை தெரிவு செய்ய முடியாது.

அரச ஊழியர்களையும்சரியான பாதைக்கு கொண்டு செல்ல முடியாது. கடந்த காலங்களிலும் பல யோசனைகள்முன்வைக்கப்பட்டன.

ஆனால் எந்த முன்மொழிவுகளும் செயற்படுத்தப்படவில்லை.வருடாந்தம் வரவு செலவுத் திட்டம் என்பதொன்றை சமர்ப்பிக்க வேண்டும் என்பதற்காகவே இங்கு வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# வரவு - செலவு திட்டத்தின் இலக்கு தேர்தல் வெற்றியே

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் - ஒக்ரோபர் மாதமளவில்ஜனாதிபதிதேர்தல்இடம்பெறும் என்பதை ஜனாதிபதி வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக உறுதிப்படுத்தியுள்ளார்.

வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அதிகரிக்கப்பட்டுள்ள வரி விதிப்பை ஜனாதிபதி தெளிவுப்படுத்தவில்லை.தேர்தல்வெற்றியை இலக்காகக் கொண்டே வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர் டி சில்வா தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை ஜனாதிபதியும், நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். அது தொடர்பாக வரவு செலவுத் திட்டம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்குறிப்பிட்டவைவருமாறு-

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் ஜனாதிபதி வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளார் என்பதை



ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் சமூகக் கட்டமைப்பில் காணப்படும் அடிப்படை பிரச்சி னைகளுக்குத் தீர்வு காணும் வகையில் வரவு செலவுத் திட்டம் அமையவில்லை.

2024ஆம்ஆண்டுதேர்தல்வெற்றியை இலக்காகக் கொண்டு வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளமை தெளிவாக வெளிப்படுகிறது. அடுத்தஆண்டுஏப்ரல்முதல் ஒக்ரோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என்பதை ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார்.

அரச சேவையாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவால்சம்பளம்அதிகரிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கிறோம். அரச துறையை காட்டிலும் பல லட் சம் பேர் தனியார் துறையில் சேவையாற்றுகிறார்கள். தனியார் துறை தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படவில்லை.இதனை பிரதான குறைபாடாக கருத வேண்டும்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் வர்த்த மானி அறிவித்தல் ஊடாக அதிகரிக்கப்பட்டுள்ள வரி தொடர்பில் அவர் தெளிவுப்படுத்தவில்லை. மறுபுறம் சமூக பாதுகாப்பு அறவீட்டுத்தொகைக்காக வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரச வருமானத்துக்கும் அரச செலவினத்துக்கும் இடையில் காணப்படும் பற்றாக்குறையை முகாமைத்துவம்செய்யும் திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை. ஆகவே வரவு செலவுத் திட்டத்தில் காணப் படும் குறைப்பாடுகளை சுட்டிக்காட்டுவோம். - என்றார்.

(05)

# அரசின் வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுகள் நாட்டு மக்களை ஏமாற்றும் மற்றுமொரு செயல்

## ஹரினி அமரசூரிய சுட்டிக்காட்டு

நாட்டு மக்களை ஏமாற்றும் பிறிதொரு செயற்பாடாகவே 2024 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் காணப்படுகிறது.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச் சினை களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் எவ்வித பரிந்துரைகளும் அதில் முன் வைக்கப்படவில்லை.

இருக்கும் பல்கலைக்கழகங் களில் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் புதிதாக நான்கு பல்கலைக்கழகங்களை அமைப்பதாக குறிப்பிடுவது நகைப்புக்குரியதுஎனமக்கள்விடுதலைமுன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை ஜனாதிபதியும்,நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத் தில் முன்வைத்தார்.

இதனைத் தொடர்ந்து வரவு - செலவுத் திட்டம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்குறிப்பிட்டவைவருமாறு-

தவறுகளை திருத்திக் கொண்டு



முன்னேறிச் செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட சமர்ப் பின் போது இந்த கருத்தையே குறிப்பிட்டார். ஆனால் எந்த தவறும் திருத்திக் கொள்ளப்படவில்லை.

நாட்டு மக்களை ஏமாற்றும் பிறிதொரு செயற்பாடாகவேஇந்தவரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் எதிர் கொண்டுள்ளஅடிப்படைபிரச்சினைகளுக்கு தீர்வு முன் வைக்கப்படவில்லை. வரி அதிகரிப்பு,தேசிய வளங்களை விற்றல் என்பவை அரச கொள்கையாக முன்வைக்கப்பட்டுள்ளன.

வரையறையற்ற கடன்க ளால் நாடு வங்குரோத்து நிலை யடைந்தது என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.ஆனால் கடன்படு எல்லையை 3400 பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளார். ஆகவே இந்த வரவு செலவுத் திட் டம் நடைமுறைக்கு ஒருபோதும் சாத்தியமடையாது.

நாட்டில் 17 அரச பல்கலைக் கழகங்கள் உள்ளன. இவற்றில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு முன் வைக்கப்படவில்லை. மாறாக புதிதாக 4 பல்கலைக் கழகங்களையும்,தனியார் பல்கலைக்கழகங்களையும் உருவாக்குவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். இது நகைப்புக் குரியது. 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என் பதை ஜனாதிபதி தனது முன்மொழிவுகள் ஊடாக குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. - என்றார்.

(05)


# பாதீட்டில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளை நடைமுறைப்படுத்த முடியுமா என்பது சந்தேகமே

## ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டு

வரவு செலவு திட் டத்தில் ஜனாதிபதி பல யோசனைகளை முன் வைத்துள்ள நிலையில் அதனை நடைமுறைப்படுத்த முடியுமா என்பதே எமது கேள்வியாக உள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை ஜனாதிபதி முன்வைத்து உரையாற்றியதையடுத்து அது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -



கடந்த வருடம் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்ட யோசனைகளில் 90 வீதமானவை நடைமுறைப்படுத்தப்படவில்லைஎன்பதை நாம் அறிவோம்.

அதேபோன்று அரசாங்கத்தால் தொடர்ந்தும் தெரி விக்கப்பட்டு வரும் கடன் மறுசீரமைப்பு இன்னும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை.

அதனை நடைமுறைப்படுத்தாமல் வேறு எதையும் முன்னெடுக்க முடியாது.

வரவுசெலவுத்திட்டத்தின்ஊடாகஜனாதிபதிசிறந்தவிடயங்களைநாடாளுமன்றத்தில் முன்வைத்தார். எனினும் அரசாங்கத்தால் அதனை நடைமுறைப்படுத்த முடியுமா? என்பதே கேள்வியாக உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

05)

# மின்னல் கடத்தியின் 45 அடி நீள செப்பு ஹோமாகம நீதிமன்றில் மாயமானது

ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் பொருத்தப்பட்டுள்ள மின்னல் கடத்தியின் 45 அடி நீள செப்புக் கம்பியை அறுத்து திருடிச் சென்றுள்ளதாக ஹோமாகம பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் நீதிமன்ற பதிவாளர் ஹோமாகம தலைமையக பொலிஸில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த திருட்டு எப்போது நடந்தது என்பது இன்னும் சரியாக தெரிய வில்லை .

(05)

# கந்தசஷ்டி 2 ஆம் நாள்

## கருணைக் கடவுளாய் மலர்ந்தாய் கந்தாய்



ஓசையும் நீயே ஒளியும் நீயே
மாசே இல்லா மாணிக்கம் நீயே
ஆசை அறுக்கும் அப்பனும் நீயே
ஐயா கந்தா ஆறுதல் நீயே

எல்லா விடத்தும் இருப்பாய் கந்தா
தொல்லை களைய வைப்பாய் கந்தா
நல்லைப் பதியில் உறையும் கந்தா
நாளும் துணையே நீயே கந்தா

செல்வச் சன்னதி தெரிவாய் கந்தா
சீரும் சிறப்பும் தருவாய் கந்தா
உள்ள முருகிப் பாடு மடியார்
உயர் வாயிருக்க அருள்வாய் கந்தா

மயிலில் விரும்பி அமர்ந்தாய் கந்தா
மயக்கும் வினையை அறுப்பாய் கந்தா
கயிலை மலையான் கனன்ற பொறியால்
கருணைக் கடவுளாய் மலர்ந்தாய் கந்தா

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

# பலாலி வந்த விமானம் திரும்பிச் சென்றது

## மோசமான காலநிலையே காரணம்

சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த விமானம் நிலவும் மோசமான வானிலையால் யாழ்ப்பாணம்சர்வதேச விமான நிலையத்தில் தரை யிறங்காது, மீண்டும் சென்னை விமான நிலையத்திற்கு திரும்பி சென்று தரையிறங்கி உள்ளது.

சென்னைசர்வதேச விமான நிலையத்தில் இருந்து, திங்கட்கிழமை யாழ்ப்பாணம்சர்வதேச விமானநிலையத்திற்கு புறப்பட்ட விமானமே, யாழில்தரையிறங்காது மீள சென்னைக்கு திரும்பி இருந்தது.

குறித்த விமானத்தில் 24 பயணிகள் பயணித்தனர் எனவும், அவர்களுக்கானமாற்று பயணச்சீட்டுகள்வழங்கி மாற்று பயண ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (05)

# அந்தோனியார் சிலையை திருடிச்சென்ற இருவர் கைது



மொரட்டுமுல்லை புனித அந்தோனியார் ஆலயத்தில் சிலையொன்றை திருடிச்சென்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் மல்வானை பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதோடு சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட காரும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வேறொருதேவாலயத்தில்காரைப்பயன்படுத்தி திருடும்காட்சிகள் அந்த பகுதியில் உள்ள சி.சி.ரி.வி. கமெராவில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

### வாய்ப்பை மாகாண சபை பயன்படுத்துமா?

**2024 வரவு செலவுத் திட்டத்தில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் தொடர்பான முன்மொழிவுகள் கவனத்துக்குரியன. 4 புதிய பல்கலைக்கழகங்களைத் தொடங்கவுள்ளதாக அறிவித்துள்ள அவர், மாகாண சபைகள் புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு அனுமதிக்கப்படுவதாகவும் அறிவித்தார்.**

**”13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளும் பல்கலைக்கழங்களை ஆரம்பிப்பதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் மாகாண சபைகளின் மூலமும் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்படும் என நான் முன்மொழிகின்றேன்” என்று ஜனாதிபதி தெரிவித்தார்.**

**இது ஒன்றும் புதிய அறிவிப்பல்ல. ஏற்கனவே அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் நடத்திய கூட்டங்களில் அரசுத் தலைவரால் தெரிவிக்கப்பட்ட கருத்துத்தான். மகாண சபைகள் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படும் என்று அப்போதே அவர் தெரிவித்திருந்தார். அதனையே இப்போது வரவு செலவுத் திட்டத்தின் மூலமும் அறிவித்திருக்கிறார்.**

**இந்த அறிவிப்பு அரசின் கொள்கையளவிலான அறிவிப்பு மட்டும்தான். இதற்கென எந்த நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. அதேபோன்று எந்தக் காலவரையறைக்குள் மாகாண சபைகளுக்கான பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படும் என்றும் அரசுத் தலைவர் அறிவிக்கவில்லை. இவற்றையெல்லாம்விட எந்தத் துறைகள்சார்ந்து மாகாணசபைகள்பல்கலைக்கழகங்களை உருவாக்க அனுமதிக்கப்படும் என்றும் அறிவிக்கவில்லை.**

**அதேபோன்று கொழும்பு அரசே மாவட்டத்திற்கு ஒரு பல்கலைக்கழகம் என்கிற ரீதியில் பல்கலைக்கழங்களைத் தொடங்கி வருகின்றது. பெரும்பாலான மாவட்டங்களில் அவ்வாறான பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களில் 5 மாவட்டங்களில் ஏற்கனவே பல்கலைக்கழகங்களோ அல்லது பல்கலைக்கழக வளாகங்களோ செயற்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட நிலையில் மாகாண சபைகள் எங்கு எப்படி எதற்காகப் பல்கலைக்கழகங்களை உருவாக்கப் போகின்றன என்கிற தெளிவான வரையறைகளோ திட்ட முன்மொழிவுகளோ வழங்கப்படவில்லை.**

**இருப்பினும் இந்த வாய்ப்பை வடக்கு கிழக்கு மாகாண சபைகள் தவறாமல் பயன்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். அப்போதுதான் இந்த மாகாணங்களுக்கும் அதன் புவியியல் அமைவிடங்களுக்கும் ஏற்றவாறான கற்கைகளை மேற்கொள்ளமுடியும். குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் பெருமளவு கடல் பகுதியைக் கொண்டிருப்பதால் கடல்சார் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படுவதன் தேவை நீண்ட காலமாகவே வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அத்தகைய தேவைகளை நிறைவேற்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் முன்வரவேண்டும்.**

**அரசுத் தலைவரின் அறிவிப்பில் எதிர்காலத்தில் மாகாண சபைகள் --மூலம் பல்கலைக்கழகங்கள் தொடங்கப்படும் என முன்மொழிகின்றேன் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதற்கான நிதியை கொழும்பு அரசுதான் ஒதுக்குமா அல்லது மாகாண சபைகள் தாமே தேடிக்கொள்ள முடியுமா என்பது போன்ற தெளிவு இல்லை. மாகாண சபைகளுக்குத் தனியாக நிதி ஆதாரங்களைத் தேடிக்கொள்ளும் வாய்ப்பு மறுக்கப்பட்டிருக்கும் நிலையில், கொழும்பின் நிதி உதவியில் மட்டுமே அத்தகைய திட்டங்கள் இப்போதைக்குச் சாத்தியம். பொருளாதார நெருக்கடிக்கள் சிக்கியுள்ள கொழும்பு, அவ்வாறு மாகாண சபைகள் பல்கலைக்கழகங்களை உருவாக்க இப்போதைக்கு நிதி வழங்கும் என்று எதிர்பார்க்க முடியாது.**

**இருந்தாலும் வேறு வகைகளில் நிதி ஆதாரங்களைத் திரட்டி, குறிப்பாக நன்கொடைகள் மூலம் நிதி சேகரித்து பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்வது தொடர்பில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தீவிரமாக முயற்சி எடுக்கவேண்டும். வழிவகைகளை ஆராய வேண்டும். வாய்ப்பைத் தவறவிடக்கூடாது.**

# சஜித்தின் ஆட்டம்

உபுல் யோசப் பெர்னான்டோ

2015 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று ஐ.தே.க.வுடன் இணைந்து தேசிய ஆட்சி அமைத்தார், அதன் பின்னர் தேசிய ஆட்சியை அமைத்து ஆளும் தரப்பினதும் எதிர்க் கட்சியினதும் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்காத இலங்கையின் முதல் அரச தலைவர் ஆனார். ராஜபக்சக்களும் அவரைத் தாக்குவதில் எச்சரிக்கையாக இருந்தனர். விமல் வீரவன்ஸவும் உதய கம்பன்பிலவும் முதலில் ‘குய்யோ முறையோ’ என்று கத்திவிட்டு, பிறகு மைத்திரியுடன் ’செட்’ ஆனார்கள். மத்திய வங்கிக் கொள்ளையில் பிரதமர் ரணில் மீது மைத்திரி நடத்திய தாக்குதலுக்கு பதில்சொல்ல எந்த ஐ.தே.க அமைச்சருக்கும் தைரியம் இருக்கவில்லை என்கிற அளவிற்கு மைத்திரி பலமாக இருந்தார்.

அன்று, சரத் பொன்சேகா போன்ற ஒரு சிலரே மைத்திரியை விமர்சிக்கத் துணிந்தனர். அப்படிப்பட்ட காலத்திலும் மைத்திரியின் சொந்தக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், அஞ்சாமல் அவருக்கு எதிராக நின்றார். அவர்தான் றொான் ரணசிங்க. பொலன்னறுவையின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதிநிதி அவர். ராஜபக்ச குடும்பத்தினர் ஜனாதிபதி மாளிகைக்குள் புகுந்து மைத்திரியுடன் ’டீல்’ போட்டபோது, மைத்திரியின் கோட்டையிலேயே இருந்துகொண்டு அச்சமின்றி மைத்திரியுடன் மோதினார். 2015ஆம் ஆண்டு மைத்திரிபாலவுக்கு எதிராகச் சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்பினார். அப்போது மைத்திரிபால அரசனைப் போன்று ஆளும் தரப்பையும் எதிர்க்கட்சியையும் ஆட்சி செய்துகொண்டிருந்தார். அந்தச் சிறப்புரிமைக் கேள்விக்கான பதிலைப் பெறாததால், ஜூலை 13, 2019 அன்று ரோன் அதை மீண்டும் எழுப்பினார்.

‘‘நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்பினேன். ஆனால் அதை தீர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை. நான் ஜனாதிபதி மைத்திரிபாலவின் சித்தாந்தத்தை விமர்சிப்பவன். நாட்டு மக்களின் நலனுக்காக இதைச்செய்தேன். இதன் காரணமாக நான் ஜனாதிபதியால் துன்புறுத்தப்பட்டேன். ஜனாதிபதியும் அவரது குடும்பத்தினரும் என்னை எல்லா பக்கங்களில் இருந்தும் தாக்கத் தொடங்கினர். எனது முறைப்பாடுகள் தொடர்பில் பொலன்னறுவைப் பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொலன்னறுவைப் பொலிஸ் ஜனாதிபதியின் குடும்பத்தினரால் கட்டுப்படுத்தப்பட்டது. என்னைப் பொய் வழக்கில் சிக்க வைத்தனர். வேண்டுமானால் ஐ.தே.க. பொலன்னறுவை நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைப்பாளர்களைக் கேளுங்கள், உண்மையைச் சத்தியம் செய்வார்கள். இதனால் 2016ஆம் ஆண்டு அடையாளம் தெரியாத கும்பல் எனது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்த முயன்றது. 2017 ஆம் ஆண்டு வெலிகந்தேவில் நான் கைக்குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானேன். ஒகஸ்ட் 2017இல் கொழும்பில் எனது வர்த்தக நிலையம் ஒன்று எரிக்கப்பட்டது. அப்போது ஜனாதிபதி மைத்திரிபால பாதுகாப்பு அமைச்சராக இருந்தார். அவரது சகோதரர் டட்லி சிறிசேன என்னை மூன்று முறை மிரட்டினார். பொலன்னறுவை பொலிஸில் முறைப்பாடு செய் தேன். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சிஐடிக்கு நான் கடிதம் எழுதினேன், இது அவர்களின் கவலை இல்லை என்று சிஐடி கூறியது.’’



இப்படி நாடாளுமன்றத்தில் உரையாற்றினார் றொஷான்.

றொான் ரணசிங்க அச்சமின்றி மைத்திரிபாலவைச் சந்திப்பது இப்படித்தான். றொான் முதன் முதலில் பொலன்னறுவையில் இருந்து 2010இல் நாடாளுமன்றத்திற்கு வந்தார். 2015இல் பொலன்னறுவையில் அதிக வாக்குகளைப் பெற்றிருந்தார். 2010ஆம் ஆண்டு முதன்முறையாக நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்ட றொான் ரணசிங்க 56,223 வாக்குகளையும், கட்சியின் செயலாளர் மற்றும் மாவட்டத் தலைவராகவும் இருந்தவரான மைத்திரிபால 90,118 வாக்குகளையும் பெற்றிருந்தனர். 2020 பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுன மைத்திரிபாலவை முன்னிறுத்தாது என றொஷான் ரணசிங்க நினைத்தார். முடிந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு வருமாறு சவால் விடுத்தார். ஆனால் அப்போதும் ராஜபக்சக்கள் மைத்திரியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு பொலன்னறுவையில் இருந்து மைத்திரியை வேட்புமனு தாக்கல் செய்ய ஏற்பாடு செய்திருந்தார்கள் என்பது றொானுக்குத் தெரியாது. முன்னாள் ஜனாதிபதியின் சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி மைத்திரிபால பொதுத் தேர்தலுக்கு வந்தார். ஆனால் அவர் பெற்ற வாக்குகள் 111,137 மட்டுமே. றொான் ரணசிங்க 90,615 வாக்குகளைப் பெற்றார். வித்தியாசம் 20,522 வாக்குகள்.

மைத்திரி ஜனாதிபதியாக இருந்த காலத்தில் மைத்திரியுடன் அச்சமின்றி மோதிய றொானை கோட்டா கருத்தில் கொள்ளவில்லை. மைத்திரிபாலவை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக றொஷானை ஒதுக்கி வைத்தார். இதற்குக் காரணம் ஜனாதிபதி காலத்தில் கோட்டாபயவை சிறைக்குச் செல்லாமல் காப்பாற்ற மைத்திரி உதவியது தான். 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டா வெற்றி பெற மைத்திரி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு கிடைத்தது. றொஷான் ரணசிங்கவுக்கு அமைச்சர் பதவி வழங்காதது மைத்திரிக்கு கோட்டா செய்த மிகப்பெரிய நன்றிக்கடன். இருந்தாலும் கட்சி மற்றும் குடும்பத்தின் செல்வாக்குக் காரணமாக றொஷானுக்கு இராஜாங்க அமைச்சர் பதவியை கோட்டா வழங்கினார்.

றொஷான் இந்த இராஜாங்க அமைச்சர் பதவியை மிகவும் சிரமப்பட்டு வகித்தார். அதற்குக் காரணம், விவசாயத்துக்கு இயற்கை உரங்களைப் பயன்படுத்த கோட்டா பிறப்பித்த உத்தரவுதான். இந்த உத்தரவால் அதிகம் பாதிக்கப்பட்டது விவசாயத்தை பிரதான வாழ்வாதாரமாக கொண்ட பொலன்னறுவை மக்கள்தான்.

ஏப்ரல் 2, 2022 அன்று, கொழும்பு காலி முகத்திடலில் ‘அரகலய’ ஆரம்பிப்பதற்கு முன்னர், அவர் கோட்டாவுக்கு கடிதம் எழுதி இராஜாங்க அமைச்சர் பதவியைவிட்டு விலகினார். அவர் இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து மாத்திரமன்றி கட்சியின் பொலன்னறுவை தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்தும் விலகினார். கரிம உரங்களைப் பயன்படுத்தியதால் பயிர் இழப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குமாறு கோட்டாவிடம் அவர் தனது ராஜினாமா கடிதத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

‘அரகலயா’வின்போது அவரது வீடு மற்றும் வாகனங்களும் தாக்கப்பட்டன. பிரதமர் மஹிந்தவையும் அமைச்சரவையையும் பதவி விலகுமாறு கோட்டாபய கேட்டுக்கொண்டார். பின்னர் ரணிலைப் பிரதமராக்கியதும் றொஷானை விளையாட்டுத்துறை அமைச்சராக்கினார். ரணில் பிரதமரானபோது ரணிலுக்கு ஆதரவளிக்க பொது ஜன பெரமுனவில் மூன்று பேர்கூட இல்லை. அப்போது ரணிலுக்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினர்களை கூட்டிச் சென்றவர் றொஷான் ரண சிங்க.

ஜனாதிபதி பதவியில் இருந்து கோட்டா விலகியபோதும், ரணில் தற்காலிக ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தில் அடுத்த ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட்டபோதும், ராஜபக்சக்களோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவோ ரணிலுக்குத் தேவையான ஆதரவை நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து பெறவில்லை. இதனால் பொது ஜன பெரமுன உறுப்பினர்கள் அதிர்ச்சியடைந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் வீட்டுக்குள்ளேயே பேசிக் கொண்டிருந்ததைத் தவிர, ரணிலுக்கு வாக்களிக்கும் வகையில், கூட்டத்தை ஏற்பாடு செய்ய இடமோ, வசதியோ இருக்கவில்லை. ராஜபக்சக்கள் மறைந்திருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தொலைபேசியில் அழைத்து ரணிலுக்கு வாக்களிக்குமாறு கேட்டுவிட்டு வெளியே வரவே பயந்தனர். றொஷான் அச்சமின்றிப் பொதுஜன பெரமுன உறுப்பினர்களை தனது வீட்டில் கூட்டி ரணிலுக்கு ஆதரவளிக்க வேண்டும் எனப் பகிரங்கமாக அறிவித்தார்.

அப்படியிருந்த றொான்தான் இன்று ரணில் விக்கிரமசிங்கவைத் தீவிரமாக எதிர்க்கிறார், கோட்டாவின் அமைச்சரவையை ரணில் மாற்றியது அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் மீதுள்ள அன்பினால் அல்ல, ஆனால் அந்த அமைச்சரவையில் இருந்த அமைச்சர்கள் எந்தப் பிரேரணைக்கும் கையை உயர்த்தும் ‘சிக்னல் துருவங்கள்’ என்பதை அறிந்துதான். 2002 அல்லது 2015இல்கூட ஐ.தே.க அமைச்சரவையில் ரணில் இப்படியான அமைச்சர்களை சந்திக்கவில்லை. இது ‘ஆமாம் ஐயா’ அமைச்சரவை எனப்படும், ரணில் சொல்வதை இவர்கள் எதிர்க்கவில்லை. ஆனால் இந்த அமைச்சரவையில் உள்ள அமைச்சர் ஒருவரை ரணில் தவறாகப் படித்தார். அவர் றொான் ரணசிங்க.

முன்னாள் ஆட்சியாளர்களாலோ அல்லது எதிர்க் கட்சிகளினாலோ தாக்கப்படாத இலங்கையின் மிகவும் சக்தி வாய்ந்த ஜனாதிபதியான மைத்திரியையே அவமானப்படுத்தியவர் றொான் என்பதை ரணில் மறந்துவிட்டார். ஏனைய அனைத்து அமைச்சுக்களையும் ரணில் விரும்பியவாறு தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால், விளையாட்டுத்துறை அமைச்சையும் தாம் விரும்பியவாறு கட்டுப்படுத்த ஆரம்பித்தார். விளையாட்டுத்துறை அமைச்சு

(9ஆம் பக்கம் பார்க்க..)

# சீயோன் தேவாலயத்துக்குச் சென்ற போது எனக்குக் கடும் மன உளைச்சல் ஏற்பட்டது

## அமெரிக்கத் தூதுவர் வருத்தம்



2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞயிறு தாக்குதலின் போது பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திற்கு சென்றபோது தனக்கு கடும் மன உளைச்சல் ஏற்பட்டதாக அமெரிக் கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குள்ளான மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திற்கு அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

விஜயம் குறித்து அமெரிக்கத் தூதுவர் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிடுகையில் –

நான் சீயோன் தேவாலயத்திற்குச்சென்று, 2019 இல் இடம்பெற்ற அந்த பயங்கரமான நாளின் தாக்கம் குறித்து போதகர் ரோன் மகேசனுடன்கலந்துரையாடியதில் எனக்கு கடுமையான மன உளைச்சல் ஏற்பட்டது. இங்கு கொல்லப்பட்ட 25 இற்கும் மேற்பட்டகுழந்தைகளால்சமூகம்மேம்படுவதற்கானஒருகுணப்படுத்தும் ஆதரவைப்பெற்றுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு குழு உறுப்பினர்களை சந்தித்துக்கலந்துரையாடியுள்ளார்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் நிலவும் நிலப்பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும்சமூகஒற்றுமையைக் கட்டியெழுப்புவதில் தேசிய சமாதானப் பேரவையின் மட்டக் களப்பு குழு உறுப்பினர்களின் ஒருங்கிணைந்த பங்கு குறித்து பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளார்.

சமூகங்களுக்கிடையில் இனவாத பதற்றங்களைத் தணிப்பதில் அவர்கள் பகிர்ந்து கொண்ட விடயங்கள் இலங்கையின் வெற்றி மற்றும் பன்மு-கத்தன்மைக்குமுக்கியசான்றாகும் எனத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நிறுவப்பட்டுள்ள யேசு சபையைச் சேர்ந்தவரும் இலங்கை 'கூடைப் பந்தாட்டத்தின் தந்தை' என்று அழைக்கப்படுபவருமான அமெரிக்காவில் பிறந்த யூஜின் ஜோன் ஹெபர்ட்டின் சிலையை அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் பார்வையிட்டுள்ளார்.

கடந்த 1948 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் லூசியானாவிலிருந்து இலங்கை வந்த யேசு சபையைச்சேர்ந்த யூஜின் ஜோன் ஹெபர்ட், மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி கூடைப்பந்தாட்ட அணியை தேசிய சாம்பியன்ஷிப்களுக்கு வழி நடத்தினார். அப்போதும் அருட்தந்தை யூஜின் ஜோன் ஹெபர்ட், கூடைப்பந்து விளையாட்டை சமூகங்களை இணைக்கவும் புரிந்துணர் வை வளர்க்கவும் ஓர் இராஜதந்திர கருவி-யாகப் பயன்படுத்தினார் என்று அமெரிக்கத்தூதுவர் ஜூலிசங் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மற்றும் அமெரிக்காவின் 75 வருட கூட்டாண்மை இலங்கையர்களுக்குஎவ்வாறான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது என்பதை ஆராய்வதற்காக அமெரிக்கத் தூதுவர் ஜூலிசங் மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அங்குள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பிரகாசமான எதிர்காலத்தை உறுதி செய்வதற்கும் அதில் இருந்து படிப்பினைகளை கற்றுக்கொள்வதற்கும், முன்னேறுவதற்கும், ஒன்றாக இணைந்து செயற்படுவதற்கும் காணப்படும்வாய்ப்புகளை மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் உள்ள இலங்கையர்களிடம் இருந்து இனங்கண்டு பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுடன் ஒன்று சேர்ந்து ஈடுபட ஆவலுடன் காத்திருப்பதாகவும்அமெரிக்கத்தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# தலவாக்கலையில் கத்திக்குத்து இளைஞன் ஒருவர் பரிதாப சாவு

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹொலிரூட் தோட்ட தொழிற்சாலை முன்பாக இடம்பெற்ற கைகலப்பில் இளைஞர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த நபர் கவலைக்கிடமான நிலையில் லிந்துலைபிரதேசவைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கத்திகுத்துக்குஇலக்காகிஉயிரிழந்த நபர் கிரேட் வெஸ்டன் பகுதியைச் சேர்ந்த சிவஞானம் சஜீவன் எனும் 22 வயதுடையவர் ஆவார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளைதலவாக்கலைபொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் திங்கட்கிழமை இரவு7மணியவில்இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

# இலங்கை குடும்பத்தினர் மீது ஆஸியில் இனவெறி தாக்குதல்

*ஆஸ்திரேலியாவில் மாற்றுத்திறனாளியானமகளுடன்பலாரட் நகரிற்கு சென்ற இலங்கையர் ஒருவர் இனவெறிதாக்குதலிற்கு இலக்கானமை தொடர்பாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*ஆஸ்திரேலியாவின் பலாரட் நகரிற்கு மாற்றுதிறனாளியான தனது மகளுடன் சென்ற இலங்கையை சேர்ந்த நபர் ஒருவர் நுககும்புர குடும்பத்தினர் மாற்றுத்திறனாளியான தனது 12 வயது அனுலியுடன் மெல்பேர்னிற்கு மிகவும் சவாலான பயணத்தை மேற்கொண்டிருந்தனர் - அனுலி சக்கரநாற்காலியிலேயே சென்றார்.*

*ஓர் இடத்திற்கு சென்றுவிட்டு நாங்கள் காரில் திரும்பிக்கொண்டிருந்தவேளை இளைஞர்கள் குழுவொன்று எங்களை நோக்கி சத்தமிட தொடங்கினர். இரும்புசங்கிலி போன்ற ஒன்றை எனது மகளின் முகத்தை நோக்கி வீசினார்கள் என துசித நுகககும்புர தெரிவித்துள்ளார்.*

*நான் உங்களுக்கு என்ன பிரச்சினைஎனகேட்டேன் அதற்கு என்னை நோக்கி வந்த ஒருவர் என்னைதாக்கத் தொடங்கினார் என துசித தெரிவித்துள்ளார்.*

*நான் எனது குடும்பத்தினரை காருக்குள் ஏற்றுவதற்கு முயற்சி செய்துகொண்டு என்னை பாதுகாக்கவேண்டிய நிலைக்கு உள்ளானேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*நான் பொலிஸாரைத் தொடர்புகொள்ள முயன்றேன். இதனைஅறிந்தஅவர்கள்என்னை தாக்குவதை விட்டுவிட்டு பஸ்ஸில் ஏறிச்சென்றுவிட்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*நான் அதிர்ச்சியடைந்துள்ளேன்எனவும்குறிப்பிட்டுள்ள அவர், நாங்கள் ஒரு தசாப்தத்திற்கு முன்னரே மெல்பேர்ன் வந்துள்ளோம். இளைஞர்கள் இனவெறி கூச்சல் எழுப்பியதை எனது மகளின் பராமரிப்பாளர் கேட்டுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.*

*(05)*


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557









கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup
Fruit Salad
Ice Cream & Fruit Salad
Cream Caramel
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml
Milk Drink
Cocacola M
Pepsi M
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# இணையவழி தொழில்நுட்பத்தின் கீழ் கட்டடங்கள் நிர்மானங்கள் தொடக்கம்



உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இணையவழி முறையின் மூலம் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான விண்ணப்பங்களை அங்கீகரிக்கும் முறை வடமாகாணத்தில் இருந்து ஆரம்பமாகிறது. முதற்கட்டமாக வடமாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி நிறு வனங்களில் இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன், விரைவில் நாடளாவிய ரீதியில் உள்ள ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் அறிமுகப்படுத் தப்படவுள்ளது.

உலக நகர திட்டமிடல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம், வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமைநடைபெற்றவைபவத்தில் இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். திருமதி சார்ள்ஸ் அவர்கள் சூம் தொழில்நுட்பத்தினூடாக இணைந்து கொண்டதுடன், வடமாகாண சபையின் பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, வடமாகாண அலுவலக பணிப்பாளர் டி.பி.எஸ்.கே. திஸாநாயக்க, பிரதிப் பணிப்பாளர் கே. ஜீவகன் மற்றும் அரச அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைவாக இது நடைமுறைப்படுத்தப்படுகிறது. கட்டட அபிவிருத்தி அனுமதிகளுக்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் விரைவாகப் பெறுவதற்கு இந்த அமைப்பு உதவுகிறது. உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு இந்தத் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் முதன்மை நோக்கம், கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான விண்ணப்பங்களை அங்கீகரிக்க எடுக்கும் நேரத்தை குறைத்து, எளிமைப்படுத்துவதன் மூலம் அதிக சேவையை வழங்குவதாகும்.

9000 சதுர அடிக்கு மேல் கட்டடங்கள் கட்டுவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையால் அனுமதி வழங்கப்படுகிறது. 9000 சதுர அடிக்கு குறைவாக இருந்தால், சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களால் ஒப்புதல் அளிக்கப்படும். நகர அபிவிருத்தி அதிகாரசபை தற்போது இணையவழி முறை மூலம் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான விண்ணப்பங்களை அனுமதிக்கும் முறைக்கு ஏற்கனவே ஒப்புதல் அளிக்க ஆரம்பித்துள்ளது. இது 2017 இல் தொடங் கப்பட்டது.

குறிப்பாக இணையவழி மூலம் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான விண்ணப்பங்களுக்கு அனுமதி அளிப்பதன் மூலம், அதை கண்காணிக்க உயர் அதிகாரிகளுக்கு அனுமதி வழங்க முடியும். வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதன் மூலம் மோசடி மற்றும் ஊழலை குறைக்க முடியும் என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. உலகநகரதிட்டமிடல் தினத்தை முன்னிட்டுநகர அபிவிருத்தி அதிகாரசபையின்வடமாகாண அலுவலகத்தால் புகைப்படப்போட்டியும் சைக்கிள் சவாரியும் நடத்தப்பட்டதுடன் வெற்றி பெற்றவர்களுக்கும் பங்குபற்றிய பாடசாலை மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. (05)

# போலி ஒஸ்திரிய நாட்டு கடவுச்சீட்டுடன் வெளியேற முற்பட்ட ஈரானியர் கைது

போலியான ஒஸ்திரிய நாட்டு கடவுச்சீட்டுடன் இலங்கைக்குள் பிரவேசித்த ஈரானிய பெண் ஒருவர் திங்கட்கிழமை பிற்பகல் அதே கடவுச்சீட்டுடன் நாட்டை விட்டு வெளியேற முற்பட்ட போது குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

53 வயதான குறித்த பெண் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் ஏறவிருந்தபோது கைது செய்யப்பட்டார் எனக் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

குறித்த பெண் இலங்கைக்குள் பிரவேசிக்க பயன்படுத்திய ஒஸ்திரிய நாட்டு கடவுச்சீட்டு போலியானது என வருகை முனையத்தில் உள்ள கணினி அமைப்பினர் கண்டறிந்துள்ள நிலையில், அவரது வருகையின் நோக்கத்தை அறிந்து கொள்ளவதற்காக அதிகாரிகள் அவரை நாட்டுக்குள் செல்ல அனுமதித்துள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் 8ஆம் திகதி நாட்டிற்கு வருகை தந்த குறித்த பெண் தனது கடவுச்சீட்டில் கொழும்பில் இருந்து பெறப்பட்ட இந்திய வீசாவை போன்றதொரு மற்றும் மொருவிசாவில் திங்கட்கிழமை இந்தியா செல்ல முயற்சித்துள்ள நிலையில், அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபரை விமான நிலைய அதிகாரிகள் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளமை குறிப்பி டத்தக்கது. (05)

# கம்பளை வலயக் கல்வி அலுவலக மலசலகூடத்திலிருந்து சடலம் மீட்பு

கம்பளை வலயக் கல்வி அலுவலகத்தின் மலசலகூடத்திலிருந்து ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பளை கல்வி அலுவலகத்தில் உதவியாளராக கடமையாற்றிய கம்பளை ரத்மல்கடுவ பிரதேசத்தை சேர்ந்த 44 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில்கம்பளைபொலிஸ்நிலையத்துக்கு திங்கட்கிழமை மாலை முறைப்பாடு கிடைத்துள்ளது. அதன்படி கம்பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து சடலத்தை மீட்டுள்ளனர்.

உறவினர்களால் சடலம் அடையாளம் காணப்பட்டதையடுத்து கம்பளை மரண விசாரணை அதிகாரியின் உத்தரவின்பேரில் பிரேதபரிசோதனைக்காக கம்பளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மின்சாரம் தாக்கி ஒருவர் பொல்பித்திகமவில் பலி!

பொல்பித்திகம - மகுல்பொத பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி நபர் ஒருவர் திங்கட்கிழமை காலை உயிரிழந்துள்ளார் என பொல்பித்திகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் பொல்பித்திகம, மகுல்பொத பிரதேசத்தை சேர்ந்த 52 வயதுடையவர் ஆவார்.

இவர் மின்சாரத்தால் தாக்கப்பட்ட நிலையில் பொல்பித்திகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் தனது பண்ணையில் காட்டு மிருகங்களால் ஏற்படும் சேதங்களை கட்டுப்படுத்துவதற்காக பொருத்தப்பட்டிருந்த மின் கம்பியில் சிக்கியே உயிரிழந்துள்ளார் என பொல்பிதிகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொல்பிதிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



## 2024 வரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் புரட்சிகரமானது என்று நிதி இராஜாங்க அமைச்சர் உட்பட ஆளும் தரப்பினர் புகழ்பாடுகிறார்கள். புரட்சிகரமானது என்றால் என்னவென்பதை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

2024ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் புரட்சிகரமானதல்ல, அது கனவு உலகத்தை அடிப்படையாகக் கொண்டது. புரட்சிகரமானது என்றால் சமூக கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். கனவு உலகு முன்மொழிவுகள் ஒருபோதும் மாற்றத்தை ஏற்படுத்தாது.

வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்கும் கலாசாரம் தற்போது கடைப்பிடிக்கப்படுகிறது. 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த கால தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும் என்றார். 2024 வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்கியுள்ளார்.

கடந்த கால தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடும் ஜனாதிபதி முதலில் உண்மை தன்மையுடன் செயற்பட வேண்டும். தேசிய வளங்களை விற்கும் ஆளும் தரப்பின் தீர்மானத்தை எதிர்ப்பது பெரும் குற்றம் என்று ஜனாதிபதி குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பழமைவாய்ந்த நுவரெலியா தபாலக கட்டடத்தை பராமரிக்க முடியாத காரணத்தால் அதனை தனியார் மயப்படுத்த போவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். அந்த தபாலகத்தை முறையாக நிர்வாகம் செய்யாதவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மாறாக தபாலகத்தை தனியார் மயப்படுத்துவது சிறந்த திட்டமாக அமையாது.

கல்வி துறை தொடர்பில் கனவுலகில் இருந்து முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாடசாலை கல்வி கட்டமைப்பு வீழ்ச்சியடைந்துள்ளால் உயர் கல்வி முறைமை பலவீனமடைந்துள்ளது. நாட்டில் உள்ள 17 அரச பல்கலைக்கழகங்களின் பிரச்சினைகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ளன. விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்.

கல்வி கட்டமைப்பு முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு ஏதும் முன்வைக்கப்படவில்லை. மாறாக புதிதாக 4 பல்கலைக்கழகங்களை ஸ்தாபிப்பதாக குறிப்பிடப்படுகிறது. ஊருக்கு ஊர் பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதால் கல்விக் கட்டமைப்பு மேம்படாது என்றார்.

## பொருளாதார,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் குறித்து ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுக்குத் தெளிவுபடுத்துவதற்காக இந்தக் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆசிரியர்கள் மற்றும் செய்திப் பணிப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்ததாவது:

இவ்வருட வரவு செலவுத் திட்டம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியலை மாற்றியமைக்கும் வரவு செலவுத்திட்டமாகும். வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் இலக்கை ஏற்கனவே நாம் நெருங்கிவிட்டோம். அரசியல் நோக்கின்றி அந்த இலக்கை அடைய எதிர்பார்க்கின்றோம்.

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றி பெறும். எப்பொழுதும் மக்களுக்கு உண்மையைச் சொல்லும் கட்சியாக இருப்பதாலேயே ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் ரீதியான பின்னடைவுகளைச் சந்திக்கிறது. இருப்பினும், மக்களுக்கு உண்மையைச் சொல்வதே ஐக்கிய தேசிய கட்சியின் பலமாகும்.

எதிர்வரும் தேர்தலில் ஏனைய அரசியல் கட்சிகளும் போட்டியிடும். இருப்பினும் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதே தனது முதல் கடமையாகும். அதன் பின்னர் ஏனைய விடயங்களில் கவனம் செலுத்த முடியும் - என்றார்.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க ஆகியோர் 2024 வரவு செலவுத் திட்டம் மற்றும் அதன் அடிப்படை குறித்து இங்கு நீண்ட விளக்கமளித்தனர்.

வெகுஜன ஊடக மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## நாட்டுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனங்கள், அமைப்புகள், சம்பந்தப்பட்ட துறையில் உள்ள தனிநபர்களின் பங்களிப்புடன் தொழில்முயற்சி, புத்தாக்கம், ஆரம்ப வர்த்தக பொருளாதாரக் கட்டமைப்பு, கல்வி, டிஜிட்டல் தொடர்பு மற்றும் கொள்கைகள் ஆகிய பிரிவுகளின் கீழ் மாநாடுகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் கலந்துரையாடல்கள், விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

உள்நாட்டு தொழில் முயற்சியாளர்கள், முதலீட்டாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் துறை சார் நிபுணர்களுக்கு இடையே ஒத்துழைப்பு மற்றும் தொடர்புகளை வலுப்படுத்துவதன் மூலம் நாடு முழுவதும் பல்வேறு தொழில்துறைகளில் உள்ள புதிய தொழில் முயற்சியாளர்களை பாராட்டவும் வலுவூட்டவும் இதன் ஊடாக நடைபெறுகின்றது.

அதன்படி, உலகளாவிய தொழில் முயற்சியாளர் வாரத்தில், இலங்கையில் 60 இற்கும் மேற்பட்ட பங்காளிகள் 100 க்கும் மேற்பட்ட வெவ்வேறு செயல்பாடுகளை பதிவு செய்துள்ளனர்.

ஸ்ராட்டப் ஜெனோம் (Startup Genome) அறிக்கையின்படி, நம் நாட்டில் ஸ்டார்ட் அப் கட்டமைப்பின் மதிப்பு சுமார் 244 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதனை ஒரு பில்லியனாக உயர்த்துவதே எமது நோக்கம். புதிய தொழில் முயற்சியாளர்களால் நம் நாட்டில் இன்று தொழில்நுட்பம் மாற்றம் அடைந்துள்ளது.

நாம் பொருட்களை கொள்வனவு செய்யும் விதம், கட்டணம் செலுத்துதல், போக்குவரத்து, வங்கி கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை போன்றவற்றில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஸ்மார்ட்போன்களில் அதிக எண்ணிக்கையிலான செயலிகளை நாம் பயன்படுத்துகிறோம்.

டிஜிகொன் (Digi--Econ) வேலைத் திட்டத்தின் கீழ் எமது தொழில் முயற்சியாளர்களுக்கு மிகவும் சாதகமான சூழலை உருவாக்க நாம் எதிர்பார்த்துள்ளோம். நமது நாட்டில் டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்குவதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து, மாவட்ட ரீதியில் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றது. நாட்டை விட்டு வெளியேறும் இளைஞர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர் இந்த திட்டத்தில் இணைந்து நமது நாட்டின் பொருளாதாரத்திற்கு வலுப்படுத்த உங்கள் கடமையை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

அங்கு உரையாற்றிய கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்ததாவது:

கைத்தொழில் அமைச்சு, நாட்டின் இளைஞர்களை இலக்கு வைத்து அவர்களை இந்தக் எண்ணக்கருவுடன் முன்னெடுத்துச் செல்லும் வகையில் செயற்பட்டு வருகின்றது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினரை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

இசற் (Z) ஜெனரேஷன் இன் இளைஞர் குழு குறிப்பாக இங்கு இலக்கு வைக்கப்பட்டுள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள், நாட்டின் பொருளாதாரத்தில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்களிப்பை 25% ஆக உயர்த்த எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

## எம்.பிக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படும் கைகலப்புச் சம்பவம் குறித்து இரு தரப்பிலிருந்தும் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் விரைவாக விசாரணைகளை நடத்தி அதனைப் நாடாளுமன்றத்தில் அறிக்கையிடுவதற்காகப் பிரதி சபாநாயகர் தலைமையில் குழுவொன்றை சபாநாயகர் நியமித்திருந்தார்.

இந்தக் குழுவின் உறுப்பினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ஷ, மருத்துவர் ரமேஷ் பத்திரன, கயந்த கருணாதிலக மற்றும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், தலதா அத்துகோரள மற்றும் இராஜாங்க அமைச்சர் மருத்துவர் சீதா அரம்போபொல ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இந்தக் குழு நான்கு தடவைகள் கூடியிருந்ததுடன், சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மேலதிகமாக இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவும் சாட்சியங்களைப் பெறுவதற்கு குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார். அறிக்கையளிக்கும் நிகழ்வில் நாடாளுமன்ற பணியாட் தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்னவும் கலந்துகொண்டிருந்தார்.

## 2024இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் சமர்ப்பித்த 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமே மிகவும் சவால் மிக்க வரவு செலவுத்திட்டமாகும். அதில் இருந்து நாம் பெற்றுக்கொண்ட நிலையான தன்மைமை அடிப்படையாகக் கொண்டே, 2024ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், நாம் எதிர்பார்க்கும் பொருளாதார வளர்ச்சியை நோக்கி பயணிக்கவும் அவசியமான பணிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நாம் முன்வைத்த 2023 ஆம் ஆண்டு முன்வைத்த வரவு செலவுத்திட்டத்திற்கு அடிப்படையாகக் கொண்ட விடயங்கள் மற்றும் 2024 ஆம் ஆண்டு முன்வைத்த வரவு செலவுத்திட்டத்திற்கு அடிப்படையாகக் கொண்ட விடயங்கள் குறித்தும் நாம் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டோம். ஆனால், 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டமொன்றை முன்வைக்க முடியுமாகுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் காணப்பட்டது.

அவ்வாறான சூழ்நிலையில், நாம் மேற்கொண்ட பணிகள் சிறப்பாக அமைந்ததன் காரணமாகவே முழுமையாக இல்லாவிட்டாலும் கூட நாம் இன்று குறிப்பிடத்தக்க அளவில் பொருளாதார ரீதியில் ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளோம். இந்த ஸ்திரத்தன்மையைத் தாண்டிய ஒரு வரவு செலவுத் திட்டமொன்று குறித்தே நாம் தற்போது கதைக்கின்றோம்.

2024 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில், அரச வருமானம் 4127 பில்லியன் ரூபாவாகவும் அரச செலவினங்கள் 6978 பில்லியன் ரூபாவாகவும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2851 பில்லியன் ரூபாய் என்ற பிரதான இலக்கங்களுடனேயே நாம் இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றோம். இந்த வரவு செலவுத்திட்டத்திற்கு அடிப்படையாக அமைந்த பிரதான விடயங்கள் குறித்து குறிப்பிடுவதாயின், நாம் எவ்வகையான இலக்குகளுடன் பயணிக்க வேண்டியிருக்கின்றது என்பது பற்றி இந்த வருடத்தின் எமது தேசிய கடன் மறுசீரமைப்பு நடடிக்கைகளின்போது நாம் தெளிவுபடுத்திய விடயங்கள் உங்களுக்கு நினைவு இருக்கும் என்று நினைக்கின்றேன்.

நூற்றுக்கு, நூற்றி இருபத்தி எட்டாக இருந்த கடன் சுமையை, நூற்றுக்கு தொன்னூற்றி ஐந்தாகக் குறைத்தல் மற்றும் 34.6 சதவீதம் நிதித் தேவையை 13சதவீதம் வரை குறைத்தல், வெளிநாட்டு கடன் நிதியை இன்று நிலவும் 9.4 சதவீதத்தில் இருந்து 4.5சதவீதம் வரை குறைத்தல் போன்ற 03 காரணங்களின் அடிப்படையிலேயே 2023 மற்றும் 2024 வரவு செலவுத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த இலக்கங்களை அடைந்து கொள்ளவே, சவால் மிக்க இக்காலப் பகுதியில் நாம் இந்த அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கின்றோம்.

2024 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில், இந்தப் பொருளாதார நெருக்கடியின்போது, அவதானம் செலுத்தப்பட வேண்டிய மற்றும் கடந்த காலங்களில் அனைவரும் கருத்துத் தெரிவித்த அனைத்துத் துறைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தி, அவர்களை மீண்டும் கட்டியெழுப்ப அவசியமான பொருளாதார உந்துதலை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். 2024 ஆம் ஆண்டினை பொருளாதார ரீதியில் வலுவான ஆண்டாக மாற்றிக்கொள்ள, 1.8% பொருளாதார வளர்ச்சியை நோக்கிப் பயணிப்பதே அரசாங்கத்தின் அடிப்படை நோக்கமாகும்.

இதன்போது, எமது கடன் மறுசீரமைப்பு மிக முக்கியமாகும். கடன் மறுசீரமைப்பு இன்றி கடன் நிலைபேற்றுத் தன்மையை இந்நாட்டில் ஏற்படுத்த முடியாது. நாம் அதனை நோக்கிப் பயணிக்க உள்நாட்டு கடன் மறுசீரமைப்புப் பணிகளை நிறைவு செய்தோம். அதன்பின்னர் வெளிநாட்டு இருதரப்பு கடன் மறுசீரமைப்புப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். அதற்காக எமக்கு சர்வதேச கடன் வழங்குனர்கள் ஆதரவு வழங்கி வருகின்றார்கள்.

இந்த வருட இறுதிக்குள் எமது கடன் மறுசீரமைப்புப் பணிகளை நிறைவு செய்து, நாம் வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு, எமக்கு மீண்டும் இயல்பான பொருளாதார நடவடிக்கைகளை தொடரக் கூடிய சூழ்நிலையை நாட்டில் ஏற்படுத்த முடியும். அதற்காக வெற்றிகரமான பல்வேறு கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம். நாம் 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்கள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம்.

அவர்களின் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை 10,000 ரூபாவினால் அதிகரித்தோம். அதேபோன்று அஸ்வெசும பயனாளர்கள், சிறுநீரக நோயாளிகள், முதியோர் மற்றும் அங்கவீனர்கள் குறித்தும் அவதானம் செலுத்தியுள்ளோம். அதேபோன்று, சிறிய மற்றும் மத்திய தர தொழில்முயற்சியாளர்கள் குறித்தும் அவதானம் செலுத்தியுள்ளோம். இதற்காக 30 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், காணி உரிமை மற்றும் தொடர்மாடிக் குடியிருப்பில் வசிப்பவர்களுக்கு அதன் உரிமையை வழங்குவது தொடர்பிலும் ஜனாதிபதி இந்த வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழிந்துள்ளார். கல்வி மறுசீரமைப்பு உட்பட பல்வேறு மறுசீரமைப்புப் பணிகள் குறித்தும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளன. கடன் பெறும் வரையறை அதிகரிக்கப்பட்டிருப்பது, மேலதிக கடன் பெறுவதற்கு அன்றி கடன் மறுசீரமைப்பு பணிகளின்போது எமக்கு அவசியமான நிதிநிலைகளை பேணிக்கொள்வதற்காகும். அதற்கு பாராளுமன்றத்தின் அனுமதி அவசியமாகும்.

குறிப்பாக, இந்த நடவடிக்கைகளின் மூலம் 2024 ஆம் ஆண்டை பலமான பொருளாதார ஆண்டாக மாற்றுவதே எமது எதிர்பார்ப்பாகும். பொருளாதார நடவடிக்கைகளை இயல்பாக மேற்கொள்ள ஆரம்பிக்கும் வருடமாக, 2024 ஆம் ஆண்டு அமையும் என்பது எமது நம்பிக்கையாகும் - என்றார்.



# மது விற்பனை நிலையங்களை திறக்கும் நேரத் தளர்வு குறித்து டயானா மகிழ்ச்சி

2024 வரவு - செலவுத் திட்ட முன்மொழிவில் மதுபான விற்பனைநிலையங்கள்திறக்கும் நேரம் குறித்த அறிவிப்பில் மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே.

மதுபான விற்பனை நிலையங்கள் திறந்திருக்கும் நேரத்தை நெகிழ்வாகக் கொண்டுவருது தொடர்பில் திங்கட்கிழமை இடம்பெற்ற 2024 வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதியால் முன்மொழிவு செய்யப்பட்டமை குறித்து டயானா கமகே மகிழ்ச்சியடைந்துள்ளார்.

சட்டவிரோதமாக மதுபானங்களை விற்பனை செய்வதைத் தடைசெய்யும் முகமாக மதுபான விற்பனை நிலையங்களுக்கு நெகிழ்வான நேரத்திற்கு திறந்திருக்கும் அட்டவணை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும் 2024 வரவு-செலவுத் திட்டத்தில் மென் மதுபான அனுமதிப்பத்திரத்திற்கான புதிய கொள்கையொன்றை திருத்துவது தொடர்பில் ஜனாதிபதியால் முன்மொழியப்பட்டது.

இதுதொடர்பில் டயானா கமகே ஊடகங்களுக்குதெரிவிக்கையில்-

ஜனாதியின் முன்மொழிவு குறித்துநான்மகிழ்ச்சியடைகிறேன். இலங்கையில் சட்டவிரோதமான மதுபான விற்பனையை நிறுத்து-வதற்கான நேரம் இது என்றும் கூறினார்.

மேலும் விற்பனை நிலையங்கள் மூடப்படும் நேரத்தை நீடிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் குறிப்பிட்டார். (05)

# மயிலத்தமடு மேச்சல்தரை போராட்டம் நீதி கிடைக்கும் வரைக்கும் தொடரும்




மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை மேச்சல் தரை தொடர்பான அறவழிப்போராட்டம் 61 நாள்களாக சித்தாண்டியில், பண்ணையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தங்களுக்கு நியாயமான தீர்வொன்று கிடைக்கப் பெறும் வரை தொடர்ந்து போராட்டம் இடம்பெறும் என பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

திங்கட்கிழமை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் மகாவலி திணைக்களத்தால்தொடுக்கப்பட்ட குறித்த வழக்கிற்கான இறுதி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் குறித்த பிரதேசத்தில் வசித்து வருவதற்கான தங்களது உறுதிப்படுத்திய வசிப்பதற்கான சான்றுகள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு நீதிபதி கட்டளை பிறப்பித்துள்ளார்.

மேற்படி வழக்கின் தீர்ப்பு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பண்ணையாளர்கள், நீதிமன்றக் கட்டளையைத் தாங்கள் மதிப்பதாகவும் இதேபோன்று அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்குசம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வருவார்களா என்ற சந்தேகம் உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இதேபோல் கடந்த காலத்தில் கொழும்பு உயர் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கிற்கும் இதேபோன்றதொரு தீர்ப்பு உயர் நீதிமன்றத்தால் கட்டளை பிறப்பித்தும் அவர்கள் அவ்விடத்தில் இருந்து வெளியேற வில்லை, பதிலாக சட்டவிரோத நில ஆக்கிரமிப்பு, அத்துமீறிய குடியேற்றம் மற்றும் கால்நடைகளுக்குஅநீதிவிளைவித்தல் என்பன போன்ற நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றனர். எனவே, சரியான தீர்வொன்று கிடைக்கப்பெறும் வரை நாங்கள் இவ்விடத்தில் இருந்து எழும்பப்போவதில்லை. போராட்டத்தைக் கைவிடுவ-துமில்லை. எமது நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமது விடயத்தில் தலையிட்டு மேச்சல் தரை கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றனர்.

எனவே, நீதிமன்றக் கட்டளையை நாங்கள் மதிக்கிறோம். அவர்கள் அவ்விடத்தில் இருந்து வெளியேறியமைக்கான உறுதியான உத்தரவாதங்கள் இடம்பெறும்போதும்சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் உறுதிப்படுத்தும் போது நாங்கள் எங்களது போராட்டத்தைக் கைவிடுவது தொடர்பாகப் பரிசிலிப்பதாக தெரிவித்தனர். (05)

# உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் நட்டஈடு: மைத்திரி, பூஜித உள்ளிட்டோர் வைப்பிலிட்டனர்

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் நட்டஈடு செலுத்தல் தொடர்பில் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றில் கருத்துத் தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேன, பூஜித ஜயசுந்தர, நிலந்த ஜயவர்தன, ஹேமசிறி பெர்னாண்டோ, சிசிர மெண்டிஸ், ஆகியோர் இழப்பீட்டு அலுவலக நிதிய கணக்கில் 3 கோடியே 68 லட்சத்து 25 ஆயிரத்து 88 சதம் ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, முழுமையாக தொகை வைப்பிலிடப்பட்டதும் பாதிக்கப்பட்டோருக்கு நீதிமன்றத்தின் கண்காணிப்புடன் நட்டஈடு செலுத்தப்படும் என்றும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச மேலும் குறிப்பிட்டார்.

(05)

# சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ள 18 பேருக்கு 3 மாதம் சமூகசேவை செய்ய உத்தரவு

## வெலிசறை நீதிமன்று விதித்தது

அனுமதியின்றி சூதாட்டத்தில் ஈடுபட்ட மற்றும் மிருகவதை செய்த குற்றச்சாட்டில் வெலிசறை நீதிவான் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்ட உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர் உட்பட 18 பேருக்கு 7 வருடங்களுக்கு இடைநிறுத்தப்பட்ட ஒரு மாத சிறைத்தண்டனை விதித்து வெலிசறை நீதிவான் புத்திக உடுவவிதான உத்தரவிட்டுள்ளார்.

மேலும், மூன்று மாதங்களுக்கு சமூக சேவை செய்யுமாறு நீதிவான் மேலும் உத்தரவிட்டார்.

குறித்த சம்பவத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான 11 சண்டைக்கோழிகளை குளியாப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள அரச கால்நடை பண்ணையில் ஒப்படைக்குமாறும் நீதி வான் உத்தரவிட்டார்.

(05)

# பொரளை தொடர்மாடியிலிருந்து வீழ்ந்த மாணவன் படுகாயம்

பொரளை பிரதேசத்தில் உள்ள தொடர் மாடி குடியிருப்பு ஒன்றின் மூன்றாவது மாடியிலிருந்து மாணவர் ஒருவர் தவறி வீழ்ந்து காயமடைந்துள்ளார் எனப் பொரளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொரளைமகசின்வீதியைச்சேர்ந்த 16 வயதுடைய பாடசாலை மாணவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

இவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் தனது தாய்க்குத் தெரியாமல் குறித்த தொடர்மாடி குடியிருப்புக்குச் சென்றுள்ள நிலையில் மாணவன் வீட்டில் இல்லாததை அறிந்த தாய், மாணவன் அடிக்கடி செல்லும் தொடர் மாடி குடியிருப்புக்குச் சென்றுள்ளார்.

தொடர்மாடி குடியிருப்புக்கு சென்ற தாய் அங்கு காணப்பட்ட தனது மகனுடன் விவாதித்துள்ளார். இதனால் மன உளைச்சலுக்கு ஆளான மாணவன் வீட்டின் பின்புறம் ஓடிச் சென்ற போது சுவரில் பொருத்தப்பட்டிருந்த சிமெந்து கட்டில் தவறி வீழ்ந்து மாடியிலிருந்து கீழே வீழ்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வாளினால் வெட்டப்பட்ட தனியார் பஸ் நடத்துநர்

களுத்துறை நகரின் மையப் பகுதியில் நூற்றுக்கணக்கான மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போது ஒருவரை வாளால் வெட்டிய நபரை தேடி விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்கப்பட்டவர் நகர மையத்தில் இரத்த வெள்ளத்தில் கிடந்த நிலையில் களுத்துறைநாகொட போதனாவைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார் எனவும்அவரதுகைகளிலும்முதுகிலும் மூன்று காயங்கள் ஏற்பட்டன எனவும், அவரது நிலை மிகவும் மோசமாக இருப்பதாகவும் வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார்.

பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்தத்தாக்குதல்இடம்பெற்றநிலையில் காயமடைந்தவர் அங்கிருந்த மாவட்ட செயலாளர் அலுவலகம் நோக்கி ஓடும் போது வீதியில் கீழே வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு உள்ளானவர் வஸ்கடுவ பிரதேசத்தில் வசிக்கும் 30 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை எனவும், அவர் தொழில் ரீதியாக தனியார் பஸ் நடத்துநர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (05)

# ஐஸ் போதைப்பொருளுடன் நவகமுவவில் இளைஞர் கைது

நவகமுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பொலிஸ் சுற்றிவளைப்பின் போது ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் நவகமுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கடுவல பிரதேசத்தை சேர்ந்த 28 வயதுடைய இளைஞராவார்.

நவகமுவை பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த இரகசிய தகவலின்பேரில்குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து 15கிராம்420மில்லிகிராம்நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தசம்பவம்தொடர்பானமேலதிக விசாரணைகளைநவகமுவபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# போதகர் ஜெரோமின் மனு மீது நவம்பர் 17இல் விசாரணை

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தாம் கைது செய்யப்படுவதைத் தடுக் கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தாக்கல்செய்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 17ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது. அது தொடர்பான மனு நேற்று (செவ்வாய்க்கிழமை) மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நவம்பர் மாதம் 17ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

(05)

# சஜித்தின் ஆட்டம்.........

(9ஆம் பக்கம் பார்க்க...)

முன்னர் ராஜபக்ச குடும்பத்தின் பட்டத்து இளவரசர் நாமல் ராஜபக்ச வசம் இருந்தது. நாமலின் பணிகளில் கோட்டாபய தலையிடவில்லை. மகிந்த ராஜபக்ச ஒரு விரலைக்கூட குத்தவில்லை. விளையாட்டு அமைச்சின் கிரீடம் நாமலின் கிரீடம். கோத்தா நமாலை நீக்கிவிட்டு ரொ-ானை விளையாட்டுத்துறை அமைச்சராக நியமித்தபோது, ரொானை விரும்பியபடி ஆட்டி வைக்கலாம் என்று நாமல் நினைத்தார். ஆனால் அதற்கு ரோன் இணங்கவில்லை. முன்னதாக, ரொான் நாமலின் நலன் விரும்பி, விளையாட்டுத்துறை அமைச்சரான பின்னர், நாமல் விரும்பியதைச் செய்யவில்லை, அதேநேரம் ரணில் தான் விரும்பியதை விளையாட்டுத் துறைக்குள் செய்ய முயன்றபோது அவர் அதற்கும் அனுமதிக்கவில்லை. ரணிலின் சாம்ராஜ்யம் பொதுமக்களின் வாக்குகளால் அல்ல, பொஹொட்டுவ உறுப்பினர்களின் வாக்குகளால் கட்டப்பட்டிருந்தபோதும் அவர் ரொானை ஓரங்கட்ட முயன்றார்.

ரணிலும் ஐக்கிய மக்கள் சக்தி கலந்து பேசி சஜித் பிரேமதாசவை அனாதரவாக மாற்றினார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியபோது, நீதிமன்றத்தின் வாயையும் ரணில் அடைத்தார். ரணில் சர்வ வல்லமை படைத்தவர் என்றே அனைவரும் நினைத்தனர். ஆனால் ரணிலின் காது வழியாக பதுங்கியிருந்து இடைக்கால கிரிக்கெட் குழுவை நியமித்து ரொான் தான் ரணிலின் காலில் விழுந்த தூசி அல்ல என்பதை உலகுக்கு காட்டினார். முதுகெலும்பில்லாத 'ஆமா சார்' அமைச்சர்களின் கண்களைத் திறந்தார்.

அப்படிப்பட்ட ரொானுடன்தான் இலங்கைக் கிரிக்கெட் விடயத்தில் ரணில் மோதல் போக்கைக் கடைப்பிடிக்கிறார்.

சஜித் பிரேமதாசவைக்கையறுநிலைக்குள்தள்ளுவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ரணில்பேசத்தொடங்கினார். ஆனால், ரணிலின் ஆட்டங்களில் இருந்து தப்பித்து முதுகை நிமிர்த்திக் கொண்ட சஜித், ரொான் தொடக்கிய போரை கையில் எடுத்து விளையாட்டுத்துறை அமைச்சையும் குழியில் போட்டார். இலங்கைக் கிரிக்கெட் விடயத்தில் ரொானின் இடைக்காலக் குழுவைத் தகர்க்கும் நோக்கில் ரணில் போட்ட திட்டத்தை அவர் உடைத்தெறிந்தார்.

1994 முதல் 2019 வரை ரணில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, சுதந்திரமான கொள்கை முடிவுகளை எடுக்கும் அமைச்சருக்கு ஆதரவாக ஆளும் தரப்பையும் எதிர்க்கட்சியையும் ஒன்றிணைக்க சந்திரிக்கா அல்லது மஹிந்த ஆகியோரால் முடியவில்லை. ரணிலுக்கு முன்னர் எதிர்க்கட்சியை வழிநடத்திய டட்லியாலும் அதைச் செய்ய முடியவில்லை. ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு எதிராகக் களமிறங்கும் அமைச்சர் அமைச்சுப் பதவியை இழந்து எதிர்க்கட்சியில் அமர்வதே எப்பொழுதும் நடக்கிறது.

ஆனால்சஜித் முழு ஆளும் தரப்பையும் எதிர்க்கட்சியையும் ஜனாதிபதிக்கு எதிரான அமைச்சர் ஒருவருக்கு ஆதரவாகக் குவித்தார்.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நடந்தது மாபெரும் புரட்சி. 1964 ஆண்டிலும் சரி 2001 ஆம் ஆண்டிலும் சரி நடந்த புரட்சிகளிலும் பார்க்கப் பெரும் புரட்சி. போட்டியின் நாயகனாக ரொான் தெரிவானார். ஆனால் சஜித்தோ அந்தப் போட்டியையே வென்றார்.



JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர்
Kalaikkathir

# மாமரத்தை வீழ்த்திய மாமத யானை!







(வி.ரி.சகாதேவராஜா)

பெரும் மாமரம் ஒன்றை அடியோடு முறித்து வீழ்த்தி அட்டகாசம் செய்துள்ளது காட்டுயானை.

இச்சம்பவம் சம்மாந்துறையை அடுத்துள்ள கந்தன்வெளி வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காரைதீவைச் சேர்ந்த இராஜநாயகம் ரமேஷ் என்பவரின் கந்தன்வெளி வயலில் நின்றிருந்த பெரும் மாமரமே இவ்விதம் முறித்து வீழ்த்தப்பட்டது.

அத்தோடு வயலிலும் யானை திரிந்ததால் நாற்றுக்கள் சேதமாகி வயல் நாசமாகியுள்ளது.

இவ்வாறு காட்டுயானையின் அட்டகாசம் தினமும் அந்த பகுதியிலே தொடர்ந்து கொண்டிருக்கின்றது. விவசாயிகள் அச்சத்துடன் விதைப்பில் ஈடுபட வேண்டி இருக்கின்றது.

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு








இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையில் பயிற்சிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை 9 மணி முதல் யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் இடம்பெற்றது.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஆறு பயிற்சி நிலையங்களில் 24 பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த 500 மாணவர்களுக்கு இந்த நிகழ்வில் சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ், கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.நிரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தலைவர் பிரசன்ன ரணசிங்கவும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் உப தலைவர் சதுர டீ சில்வா, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பணிப்பாளர் பிரியந்த வீரசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாண சித்திரப் போட்டியில் நுஸைபா முதலிடம்



(வி.ரி.சகாதேவராஜா)

2023 நடைபெற்ற அகில இலங்கை சிறுவர் சித்திரப் போட்டியில் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனைக்கு உட்பட இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரியில் ஆறாம் தரத்தில் கல்வி பயிலும் அப்துல் முனாப் பாத்திமா நுஸைபா கிழக்கு மாகாணமட்ட போட்டியில் பங்கு பற்றி முதலாம் இடத்தைப்பெற்றுள்ளார்.

இதன்மூலமாக இவர் தேசியமட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

இவர் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையில் சித்திர பாட வளவாளராக சேவையாற்றும் இறக்காமத்தைச் சேர்ந்த எஸ். எல்.ஏ.முனாவ்வின் புத்திரி ஆவார்.




## சீன ஜனாதிபதியின் சிறப்புத் தூதர் சனிக்கிழமை இலங்கை வருகிறார்

சீன ஜனாதிபதியின் சிறப்பு தூதுவர் ஷென் ஹிகின் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இருநாள் விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் சனிக்கிழமை சீன ஜனாதிபதியின் சிறப்பு தூதுவர் ஷென் ஹிகின் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என சீன வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (05)

# ஒழுக்கப் பிறழ்வுக் குற்றச்சாட்டில் பெண் கான்ஸ்டபிள் இடைநிறுத்தம்

கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை குளியலறைக்கு வரவழைத்து ஒழுக்கமற்ற வகையில் நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டில் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணி இடைநிறுத்தப்பட்டார் என கிரிபத்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

மற்றொரு பொலிஸ் கான்ஸ்டபிள் இந்த கான்ஸ்டபிளையும் பயிற்சி கான்ஸ்டபிளையும் குளியலறையில் பார்த்து இது குறித்து முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக களனி பொலிஸ் அத்தியட்சகர் மேற்கொண்ட விசாரணையையடுத்து திங்கட்கிழமை முதல் இந்த பணித்தடை அமுல் படுத்தப்பட்டுள்ளது. (05)

# கிரிக்கெட் இடைக்கால சபைக்குத் தடை விதித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் விலகினார்



கிரிக்கெட் இடைக்கால நிர்வாக சபையின் செயற்பாடுகளை இடைநிறுத்தி இடைக்காலத் தடை விதித்த விவகாரம் தொடர்பான விசாரணையில் இருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன செவ்வாய்க்கிழமை விலகியுள்ளார்.

இந்த வழக்கு தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சரால் தாக்கல் செய்யப்பட்ட மனு, நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் விக்கும் களுஆராச்சி ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் இந்த வழக்கை விசாரிப்பதற்கு தமது கட்சிக்காரர் ஆட்சேபனை தெரிவித்ததாக விளையாட்டுத்துறை அமைச்சர் சார்பில் ஆஜரான ஜனாதிபதியின் சட்டத்தரணி நீதிமன்றத்துக்கு அறிவித்தார். இந்நிலையில், விளையாட்டுத்துறை அமைச்சர், சில அமைச்சரவை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்மை நியாயமற்ற முறையில் விமர்சித்ததன் காரணமாகவே இந்த வழக்கு விசாரணையில் இருந்து விலகத் தீர்மானித்ததாக தலைமை நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன தெரிவித்தார். (05)

# கிரிக்கெட் இடைக்காலத் தடை: மற்றொரு நீதிபதியும் விலகினார்

கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக் குழு தொடர்பான மனு விசாரணையில் இருந்து மற்றொரு நீதிபதி விலகினார்.

இந்தமனு செவ்வாய்க்கிழமை சோபித ராஜகருணா மற் றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தனிப்பட்ட காரணங்களுக்காக நீதிபதி தம்மிக கணேபொல இந்த வழக்கில் பங்கேற்க விருப்பம் தெரிவிக்காததால் மற்றெரு நீதிபதியை நியமிக்க வேண்டியேற்றபட்டுள்ளது.

(05)

# தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான துன்புறுத்தலை உடன் நிறுத்துக

## சர்வதேசம் அழுத்தம்

இலங்கையில் பணியாற்றும் தமிழ் ஊடகவியலாளர்கள் அரச அடக்குமுறையில் இருந்து விடுபட்டும் அச்சமின்றியும் செயலாற்ற அனுமதிக்கப்பட வேண்டும் என, அமெரிக்காவில் செயற்படும் ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு அமைப்பு சி பி ஜே அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் ஆசிய நிகழ்ச் சித் திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பாளர் பெஹ் லி யீ கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கை அதிகாரிகள் உடனடியாக தமிழ் ஊடகவியலாளர்களான சசிகரன் புண்ணியமூர்த்தி மற்றும் பாலசிங்கம் கிருஷ்ணகுமார் ஆகியோர் மீதான அனைத்து அடக்குமுறைகளையும் கைவிட்டு, அவர்கள் சுதந்திரமாக செய்தி சேகரிப்பில் ஈடுபடுவதை உறுதி செய்ய வேண்டும்.

அத்துடன் மனித உரிமைகள் விடயங்கள் தொடர்பிலும் அது மீறப்படும் போது தமது சமூகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பிலும் செய்திகளை சேகரித்து வெளியிட்டு வரும் தமிழ் செய்தியாளர்களை இலக்கு வைத்து தொடர்ச்சியாக துன்புறுத்தும் அரசின் நீண்டகால நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும்-இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதும் பட்டாசு கொளுத்திய மலையக மக்கள்



மலையக பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை வழங்குவதற்காக, வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், மலையக பெருந்தோட்ட பகுதிகளில் பட்டாசு கொளுத்தி மக்கள் தமது மகிழ்ச்சியை வெளிப் படுத்தியுள்ளனர். வரவு - செலவுத் திட்டத்தில் மலையகத்துக்கென நிதி ஒதுக்கியமைக்காக நிதி அமைச்சர் என்றவகையில் ஜனாதிபதிக்கும், அதற்கான யோசனைகளை முன்வைத்த இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கும் மலையக மக்கள் இதன்போது நன்றி தெரிவித்தனர்.

அத்துடன் 'ரணில்+ஜீவன்' கூட்டணி மலையகத்தில் நிச்சயம் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை வந்துள்ளது எனவும், மலையக மக்களும் தேசிய நீரோட்டத்தில் இணைக்கப்பட்டுவருகின்றனர் என்பதற்கு இந்த வரவு - செலவுத் திட்டம் ஒரு சான்று எனவும் மக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.11.2023இல் வெளியிடப்பெற்றது.